637

The Registrar of Books,
Madras 6.

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-ரு | குருகுலம், [illegible]ாக்கம் ; கர, சித்திரை ; 27—4—51. | தளிர்-உ௪

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

கடற் கரை



திருச்செந்தில்

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அணா 1

'நற்றிணை' அழகு

R. G. பிள்ளை, B.A.

தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியம் தலை சிறந்தது. நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்கள் சிலவற்றை இயற்றிய ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

சிற்சில பாடல்களை ஆக்கியோர் பெயர் அவர் தம் இயற் பெயராகக் காணப்படவில்லை. இயற்பெயர் தெரியாத காரணத்தால், அப்பாடல்களைத் தொகுத்தோர் பாடலாசிரியர் பாடிய பாடல் காரணமாக அவ்வாசிரியருக்குக் காரணப் பெயர் இட்டிருப்பதை நாம் காண்கிறோம். பின்வரும் நற்றிணைச் செய்யுளின் ஈற்றடிகளில், "பேரூர்ப் பாழ் காத்திருந்த தனிமகன் போன்றே" என வருகிறது. ஆகவே அச்செய்யுளை இயற்றிவர் தனிமகனார் எனப்பட்டார்

நற்றிணையில் அத்தனிப் பாடலைப் பாடியவர், பாடவல்ல ஆசிரியர்களுள் ஒப்பற்ற தனி மகனார் என்பதும் அப்பாடலை ஆராய்வதற்கு எளிதிற் புலனாகும். நற்றிணையில் மற்றோர் செய்யுளாசிரியர் தேய்புரிப் பழங்கயிற்றினார் எனப்பட்டதும் ஈண்டு உன்னற்பாலது. பிரசங்க நூல்களிலும் இதற்குப் புறச்சான்றுண்டு.

"குணகடல் முகந்து குடக்கேர் பிருளி
மண்டினி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னி-யெவ் வாயும்
தன்றொழில் வாய்த்த இன்குர லெழிலி
தென்புல மருங்கிற் சென்றற் றாங்கு
நெஞ்ச மவர்வயின் சென்றென; ஈண் டொழிக்
துண்ட லளித்தெ னுடம்பே; விறற் போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே."

தலைவனைப் பிரிந்த தலைவியை அப்பிரிவுத் துன்பம் வாட்டுகின்றது. அவள் நெஞ்சம் அவளை விட்டுத் தலைவன்பாற் சென்று அவ்விடத்தே தங்கி விட்டது. நெஞ்சம் போனபின், தான் தன் உடம்பொடு கிடந்த தனிமையைத் தலைவி தனக்குள்ளே குறிப்பிடுகிறாள்.

நெஞ்சம் எவ்வாறு சென்றொழிந்தது? தலைவியின் தனிமை எவ்வாறிருந்தது? இவ்விரு வினாக்களுக்கும் ஆசிரியர் தனிமகனார் இரண்டு உவமைகளால் விடை தருகிறார். இவ்வளவுதான் மேற் செய்யுளில் அடங்கியுள்ள பொருள்.

தலைமகளை விட்டுத் தலைமகனிடஞ் சென்றொழிந்த அவள் நெஞ்சத்திற்கு, மழையை எங்கும் நிரம்பப் பெய்து தென்புல மருங்கிற் சென்றொழிந்த மேகம் உவமையாகிறது.

கீழ்க் கடலில் மேகம் நீரை முகந்துகொண்டது; மேற்பால் எழுந்து தன்னிருளால் நிலவுலகத்தை மூடிக்கொண்டது. பளிச் பளிச் சென்று மின்னல்கள் தோன்றின. அவை தோன்றுந்தோறும் இருண்ட ஞாலம் விளக்கம் பெறுகின்றது.

மின்னலின் தோற்றத்தை ஆசிரியர் பின்னுமோர் உவமையால் விளக்குகிறார். கம்மாளர் செம்பினாற் பானை செய்து அதைக்கடையும் பொழுது மின்னற் கொடிகளையொத்த ஒளிக்திர்கள் வீசும். வானத்தில் மேகம் மின்னுகின்ற இயற்கை எழிலைக் கம்மியர் செம்பு சொரி பானைக்கு உவமையாக்கிய தனிமகனார், இயற்கையையும் செயற்கையையும் எவ்வளவு கூர்ந்து நோக்கியுள்ளார் என்பது சொல்லாமலே விளங்கும்.

அருட்கவியாகிய மணிவாசகப் பெருமான், இறைவன்றன் அருளுருவாகிய உமையம்மையின் இடையில் இட்ட ஒட்டியாணத்தொடு மின்னலை ஒப்பிட்டு "எம்மை ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து" என்று பாடினார். அம்மையாரின் சிலையுருவத்தின்கணன்றி அருளிலிகளாற் காணமுடியாத இட்டிடையை விட, விரும்பினால் யாவரும் எளிதிற் காணக்கூடிய "கம்மியர் செம்பு சொரி பானை" மின்னலுக்கு மிகப் பொருத்தமான உவமையன்றோ? சங்க இலக்கியத்தின் உண்மைத் தன்மை (Realism)க்கு இவ்வரிய உவமை சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

முகந்து எழுந்து இருளி மின்னிய மேகம், வரையாது கொடுக்கும் வள்ளலைப் போல, எம்மருங்கும் மழை பெய்தலாகிய தன் தொழிலை நன்கு செய்ததுடன் அமையாது, இடிமுழக்கமுஞ் செய்தது. இடி முழக்கத்தை ஆசிரியர் எழிலியின் இன்குரல் என்கிறார். படையையும் நடுங்கச் செய்யும் பாம்பு இடியைக் கேட்டால் நடுங்கும். மக்களாகிய நாமும் இடிக்கு அஞ்சத்தான் வேண்டியிருக்கிறது. பின் எப்படி இடி இன்குரல் ஆகும்? ஆசிரியர் உட்கருத்தை ஈண்டு நாம் உணர்தல் வேண்டும். 'இன்குரல்' எனப்பேசுபவள் தலைவி. இடி முழக்கம் தலைவிக்கு இன்குரலாயிற்று. இடி மழை கார்காலத்தைக் குறிக்கிறது. அக்காலம் தலைமகன் திரும்புவதாகச் சொல்லிப்போன காலம். இடியைக் கேட்டதும் தலைவன் குரலைக் கேட்டதே போன்று தலைவி இன்புறுகிறாள். அவள் நுகரும் இன்பத்தை இடிக்கு அடையாக்கி ஆசிரியர் 'இன்குரல் எழிலி' என்றார். "இன் துணைப் பிரிந்தோர் நாடித்தருவது போலும் இப் பெருமழைக் குரலே' என்ற மற்றோர் நற்றிணைச் செய்யுளின் ஈற்றடிகள் இப்பொருள் நயத்தை விளக்கிப் போந்தது.

(தோடர்ச்சி 6-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

அப் பழைய நகருக்கு அரசன் மனுவேந்தன் என்பான் ஒருவன், முன்பு விளங்கினான்; சூரிய குலத்தின் தோன்றல்; பின் வந்து விளங்கும் பெருஞ் சிறப்பினனான அநபாய மன்னனுக்கு முன்னோனும் பெருமை பெற்றவன்.

மக்களுயிர்களே யன்றி மற்றைச் சிற்றுயிர்களும் மனு வேந்தன் பெருங்காவலில் கண்ணையும் உயிரையும் போல் காத்துவரப் பெற்றன. மண்ணில் வாழும் இவ் வுயிர்களே யல்லாமல் விண்ணில் விளங்கும் தேவ உயிர்களும் மகிழும்படி வேள்விகள் அளவிறந்தன அவனால் சிறப்புடன் செய்விக்கப் பெற்றன.

மேலும், மனு வேந்தன் திருவாரூரில் புற்றிடங்கொண்டு எழுந்தருளி யிருக்கும் பெருமானுக்கு, ஆகமங்கள் சொன்ன முறைப்படி வழிபாட்டுக்குரிய கட்டளைகளைத் தேர்ந்து செய்வித்தான்.

வெற்றி மிக்க அவனது ஆட்சிச் சக்கரம் உலகத்திற் பரவியது. சிற்றரசர் செலுத்தும் திறைப்பொருள், வாயிலில் செறிந்தன. பகைமையுற்ற செங்கோன்மை சிறந்தது. முன்னம் ஒருகால் மனு வென்னும் முனிவர் செய்த 'மனு நீதி' என்னும் நீதி முறையை நன்கு விளங்கச் செய்து தன் பெயரால் பின்னும் மேம்படுத்தினான்.

இங்ஙனம் அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்களை மனு மன்னன் அறநெறி வழுவாமல் அடைந்து, பகையும் தீமையும் நீக்கி ஏனை யரசர் பலரும் வியந்து போற்றும்படி உலகத்தை இனிது அரசாண்டு வந்தான். அதனால், சிறந்த நல்ல தவத்தால் அவன்

பெரிய புராணம்

தேவியின் மணி வயிற்றில் சிங்கக் குட்டியை ஒத்த புதல்வன் ஒருவன் உலகம் போற்ற அந் நாள் தோன்றினான்.

புதல்வன் நாளொரு வண்ணமாக வளர்ந்து, இறைவன் திருவருளை எய்துதற்குரிய தெய்வக் கலைகள் பல திருத்தமாய் ஓதினான்; குதிரை, யானை, தேர், படைப் பயிற்சிகளில் வல்லவனானான்; பிறவி எடுத்து வந்து வாழ்க்கை நடத்துவதும் ஒரு மாட்சியே என்று அதனை நல்ல வண்ணம் பெருமை செய்து கொள்ளும் பெரும் பண்பில் மேம்பட்டான்.

தந்தையின் உள்ளம் மகிழும்படி குணத்தால் ஓங்கினான். இளவரசு என்னும் பெயர் பெறத் தக்க நிலையில் இளஞ் செஞ்ஞாயிறு போல் வளர்ந்து பொலிவும் ஒளியும் பொருந்தி வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள், அம் மைந்தன், தேரின் மேல் அமர்ந்து அரண்மனையிலிருந்து அரசிளைஞர் சூழ மாட வீதியின் வழியாய்ப் புறப்பட்டான். இருந்து ஏத்துவோர், புகழ் உரைப்போர், நாழிகை தெரிவிப்போர் முதலியோர் தத்தம் செயல்களில் ஈடுபட்டு ஒருபால் விளங்கினர். முரசு, சங்கம் முதலிய கருவிகள் முழங்கின. மாதர் அரசிளைஞனைக் கண்டு நெஞ்சழிந்து மெய் சோர்ந்து வளை சிந்தினர்; அணி மணி மாட வீதியின் நிலை அப்போது இவ்வாறு இருந்தது.

அந் நேரத்தில், அழகிய ஆன் ஈன்ற கன்று ஒன்று, மக்கள் திரண்டு வருதலைக் கவனியாமல் அத் தெருவினூடு துள்ளி ஓடியது; அந் நிலை, மனு வேந்தனின் உண்மைப் பான்மையை அறமே இவ்வாறு இரக்கமின்றிச் சோதிப்பதுபோ லிருந்தது! ஏதோ இடுக்கண்ணால், கன்று, அரசிளைஞனது தேர்க்காலில் வந்து மோதி விண்ணுலகு அடைந்தது. அதனைக் கண்டதும் அதன் தாய் நெஞ்சம் உருகி நிலை தளர்ந்து கதறிற்று, அலறிற்று; உடல் நடுங்கிற்று; கீழே வீழ்ந்து விட்டது

தேரூர்ந்து வந்த மைந்தன், இவற்றைக் கண்டு திடுக்கிட்டான். 'என்ன இடுக்கண் வந்துவிட்டதே' என்று சொல் தடுமாறி. நெஞ்சில் துயர் மிகுந்து வருந்தினான். அறிவு அழிந்தான்; 'என் உணர்ச்சியின் பெருமை கெடும்படி, கன்றும் தாயும் இவ்வாறு துயர் மிகுந்தனவே, என்ன செய்வேன்' என்று நிலை சோர்ந்து தேரின்மேலிருந்து கீழே விழுந்து விட்டான்.

அலறுகின்ற ஆனை நோக்கி, அரசிளைஞன், உயிர் பதைத்துச் சோர்வான். நிலத்தின் மேல் வீழ்ந்து இறந்து கிடக்குங் கன்றை நோக்கிப் பெருமூச்சு விட்டு வருந்துவான். 'மனு வேந்தன் என்னும் புகழ் படைத்த என் தந்தைக்கு என்னால் உலகத்தில் இப் பழி உண்டாகுமாறு நானும் ஒருவன் பிறந்தேனே' என்று கலங்குவான்.

'இனி இப் பழியை மாற்றும் வகை யாது? வேத நூல் வல்ல வாய்மைச் சான்றோர் கூறும் முறையில் இதற்குக் கழுவாய் செய்வதும் முறையேயானால், என் தந்தை அறியு முன்பே அதனைச் செய்வேன்' என்று, இத் துயர் தீர்க்கும் பொருட்டு, மறை வல்ல பெரியோர் பாற் சென்றான்.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	கர, சித்திரை,	தளிர்
3	27-4-51 வெள்ளி	28

நூல் பணி

நெஞ்சை அள்ளும் நிலையான பணிகளில் நூல்களை வெளியிடுந் திருப்பணியும் ஒன்று. காலந் தோறுந் தோன்றிய சான்றோர் களின் அறிவுக் கருவூலமே நூல் கள்! அவற்றைப் பாதுகாத் துக் கொள்வதும் போற்றிப் பயன் பெறுவதும் வாழ்க்கை வெற்றியின் அடிப்படை அடை யாளங்களாகும்.

ஓவியம் சிற்பம் போன்ற வற்றைப் புறத் திருப்பணி என லாம்; அறிவுப் பெருக்கம் உணர் வுப் பெருக்கம் முதலியவற்றை அகத் திருப்பணி எனலாம்; புறத்துக்குப் புறமாயும் அகத் துக்கு அகமாயும் விளங்கி, அதா வது கைகளுக்கு எட்டும் ஒரு பொருளாயும் அறிவுக்கு மகிழ்வு தரும் கருத்து நிலையாயும் திகழ்ந்து ஓர் இடை நிலைக் கருவி யாய் உதவும் நூல்கள் செய்தலை அகப்புறத் திருப்பணி எனலாம்.

கால வெள்ளத்தில் அலைந்து செல்லும் நாகரிகப் புணையைத் துன்பப் புயலிலிருந்து காத்து உய்திக்கரை சேர்க்கும் உதவிக் கருவியே அறிவு நூல்கள். அவற்றை ஒழுங்காகவும் தகுதி யாகவும் போற்றிக் கொள்ள வேண்டுவது மன்பதை முன் னேற்றத்தின் முதன்மைப் பாதையாகும்.

தமிழ்க் கலைக் களஞ்சியப் பதிப்பு முயற்சியும், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சியும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் மேற்கொள்ளப்பெற் றிருப்பது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு!

முருகவேள் அருள் நூல்களை முறை செய்து, முறையே பகுதி பகுதியாக உரையுடன், ஆராய்ச்சியுடன், அடிக் குறிப்பு களுடன் தொடர்ந்து வெளி யிடும் திருப்பணி, திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் குடும்பத்தவரால் மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது! இது செய் தக்கதொன்று.

இவற்றைப் பெரிது பாராட்டு கிறோம்.

இங்ஙனமே, தேவார முதலிய திருமுறைகளும் தெளிவான உரை விளக்கங்களுடன் பகுதி பகுதியாக வெளிவருதல் நன்று.

சங்க இலக்கியம் முழுமைக் கும் ஒரே கைவண்ணமான தெளி வுரைப் பதிப்பும் வேண்டும்.

'தொல்காப்பியம்' என்னும் மாப்பேர் இலக்கணத்துக்கும் எளிய உரைப் பகுதிப் பதிப்பு இன்றியமையாதது!

இங்ஙனம் நூல் திருப்பணி, எழுத்தறிவிக்கும் அரும்பெரும் அறச்செயலாதலின், செய்வாரும் செய்விப்பாரும் பயன்கொள்வா ரும் உள்ளன்போடும் உருக்கத் தோடும் அவ்வப்போதும் கருத் தாய்ச்செய்துவரத்தக்கதிருப்பணி யாகும். பெருஞ்செல்வர்களும், அரசியலாரும், கலைநலம் அமைந்த சான்றோரும் ஒற்றுமை யுற்று, எவ்வளவுக் கெவ்வளவு பேரளவில் பெருஞ்சிறப்பில் இது செய்யப்பெறுமோ அவ்வளவுக் கவ்வளவு நாடு உயர்வடைதல் உறுதி!

எதிர்பார்த்த நலம்!
உருவான செய்கை!
பல நூற்றாண்டுகளுக்குப் பின்
கிடைக்கப் பெறுகிறோம்!

திருப்புகழ் முதலிய
முருகவேள் அருள்நூல்கள்
தெளிவான - - உரையுடன்

பன்னிரு திருமுறைகளாக,
பகுதி பகுதியாய்,
கர, சித்திரை முதல்
வெளிவருகின்றன!

உரையாசிரியர் :
தணிகை மணி
திரு. வ. சு. செ. அவர்கள்.

பன்னிரண்டாந் திருமுறை,
சேய்த்தொண்டர் வரலாறுகள்;
இதுகாறும் வெளிவராதது!
புதிய செய்யுட் காப்பியம்!
முதல் பகுதி
வெளிவந்து விட்டது!

விலை ரூ. 1—4—0

ஒவ்வோர் ஆங்கில மாதமும் முதல்
நாளில் பிற பகுதிகளும்
தொடர்ந்து வெளி
வரும்.

கிடைக்குமிடம் :-
குருகுலம்,
மதுராந்தகம் P. O.

ஒரு மட்பாண்டம் நிறைய நீர் மொண்டு வைத்துக் கொண்டு, அதனடியில் ஒரு ஆணியால் அடித்துச் சிறு துளை செய்தால், பாண்டத்திலிருக்கும் நீர் ஒரு கம்பி போல நீளமாய் இடைவிடாமல் ஒழுகும். இவ்வாறு இடை விடாது தொடர்ந்து ஒழுகினால்தான் அதனை ஒழுக்கு என்பர். சிறிது நேரம் நீர் கசிந்து பின்னர் நின்று மறுபடியும் கசிவதாயிருந்தால் அதனை ஒழுக்கு என்று சொல்வதில்லை.

அதுபோல அறத்தினை மேற்கொள்வான் ஒருவன் சிறிது காலம் கடைப்பிடித்து நடந்து, பின்னர் விட்டு விட்டு மறுபடியும் நினைத்தபோது மேற்கொள்வானாயின், அவன் அவ்வறத்தினை மேற்கொண்டு ஒழுகுகின்றான் எனல் பொருந்தாது. குறித்த காலத்தில் ஒரு நெறிப்பட்டு இடைவிடாது மேற்கொண்டு நடப்பானாயின் அச்செயல் ஒழுக்கம் எனப்படும். இடையறாத நீரொழுக்குப் போன்றது ஒழுக்கம்.

உடைமை, உயிர், ஒழுக்கம் இம்மூன்றில் சான்றோர் எதனைச் சிறப்பாகக் காப்பர் எனின், ஒழுக்கத்தினையே! உடைமையைக் காப்பவர் கடையர்; உயிரைக் காப்பவர் இடையர்; ஒழுக்கத்தைக் காப்பவர் தலையர். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்பது பொய்யா மொழி.

திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தினும் கூறியிருப்பது ஒவ்வொரு வகை ஒழுக்கமே யாயினும், ஒழுக்கமுடைமை என்று தனியாக ஓர் அதிகாரம் வைத்தது, இவ்வாறு இடையறாது ஒழுகுதலை வற்புறுத்துதற்கே. நீத்தார் பெருமை கூற வந்த இடத்தும் "ஒழுக்கத்து நீத்தார்" என்று கூறியிருத்தலை நோக்குக.

அழுக்காறு உடையவனுக்கு ஆக்கமில்லாதது போல ஒழுக்க மில்லானுக்கு உயர்வில்லை யென்றும், ஒழுக்கந் தவறுதலின் குற்ற மறிந்து மன வலி யுடையார் ஒழுக்கத்தி னின்றும்

ஒழுக்கம் எது?

வழுக்கார் என்றும், ஒழுக்கத்தால் மேன்மை எய்தலாம் என்றும் திருவள்ளுவர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் கூறுகின்றார்.

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம். இதனையறிந்து உயர்ந்த அறங்களை மேற்கொள்பவர், இடையில் வழுவாத தன்மையைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாம்.

பெரியார் ஒருவரது அறவுரை கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டுச் சில நல்லொழுக்கங்களை மேற்கொள்வதும், பின்னர் நாள் ஆக ஆகச்சிறிது சிறிதாய் விட்டு விடுவதும் ஒழுக்கமாகாது. சிலர் ஆண்டுத் தொடக்கத்தில் நாட் குறிப்பு எழுதத் தொடங்குவர். சில தினங்களுக்கு அல்லது திங்களுக்கு ஒழுங்காய் எழுதி வந்து, பின்னர் சிறிது சிறிதாய் அப்பழக்கத்தை விட்டு விடுவர். ஒன்றை மேற்கொண்டால் மன உறுதியோடு காக்க வேண்டும்.

இடையில் விட்டு விடுதல் மன வலியின்மையையும், முன்னேற்றத்தில் உறுதியான நோக்க மின்மையையும் காட்டும்.

காப்பி, புகைக்குடி இவைகளைப் பயன்படுத்திப் பழகிவிட்டவர்கள் ஒரு நாள் இப்பொருள்கள் கிடைக்கவில்லையாயின் என்ன பாடு படுகின்றனர்! காப்பி யில்லாமல் தலை வலிக்கிறது என்கின்றனர்! புகைக் குடியின்மையால் கிளர்ச்சி யில்லை என்கின்றனர்! கெட்ட பழக்கமான இவைகளில் ஒழுக்கமாய் இருக்கின்றனர். அதாவது இடைவிடாதவராய் இருக்கின்றனர். இவ் வொழுங்கில் வழுக்கினால் இடறுகின்றனர் ஆனால் நல்லவைகளில், வாழ்வின் முன்னேற்றத்திற்கான அறங்களை மேற்கொள்வதில், இவ் வொழுங்கைக் கடைப் பிடிக்க அக்கறை கொள்வதில்லை.

காந்தியடிகள் பல அறங்களை மேற்கொண்டு ஒழுகினர் என்பதை நாம் அறிவோம். அவற்றிற் சில நாள் தவறாமல் கீதை ஓதுதல், நூல் நூற்றல் முதலியன. இவைகளை இடைவிடாது ஒழுங்காகச் செய்தற்காக எங்குச் சென்றாலும் கீதையையும் இராட்டையையும் எடுத்துச் செல்வர். சிறைக்குப் போகும் போதும் இவற்றை மறப்பதில்லை. திங்கட்கிழமை தோறும் 'மௌனம்' மேற்கொள்வது அவர் வழக்கம். ஆட்சி மாற்றத்திற்காகத் தலைவர்கள், அப்போது ஆட்சியிலிருந்த வெள்ளையர்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்த அவ்வளவு முக்கியமான நிலையிலுங் கூட திங்கட்கிழமை "மௌனம்" மேற்கொள்வதை விட்டதில்லை யென்பதை யாவரும் அறிவர். ஊனுணவு உண்பதில்லை யென்னும் சிறந்த அறத்தினை மேற்கொண்டு கடைப்பிடித்தலில் அவர் காட்டிய மன உறுதியை எங்ஙனம் எடுத்தியம்ப இயலும்?

ஆகவே ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாகக் கருதி வழுவாது காத்து உய்தல் வேண்டும்.

(௪ ம் பக்கம் தொடர்ச்சி)

காந்தியடிகள் மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் கிராமங்களின் நிலை உயர்ந்திருக்குமென்பதில் சிறிதும் ஐயுற வில்லை. அவருடைய ஒப்பற்ற முறைகள் பொருளியலைச் சீர் படுத்துவதோடு மக்கட் பண்பையும் உயர்த்திவிடும். அதனால் பகைமை நீங்கிய அன்பு வளரும்; பொருட் செழிப்போடு அருளுணர்வும், துறவு உள்ளமும் நிறைந்த தெய்விக நாடாக இது மாறிவிடும். உழைப்பாளிகளும் அறிவாளிகளும், முதலாளிகளும், வற்புறுத்த லின்றி, மனமுவந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளுவர். வெறும் பொருளால் வரும் இன்பத்தைவிட இப்பண்புகளோடுகலந்து வரும் இன்பம் மிகச் சிறந்ததும் ஆன்றோர்கள் விரும்புவதும் ஆகும். பொருளியலைச் சீர்ப்படுத்தும் அரசியல் வாதிகள் இதனைக் கருத்திற் கொள்வார்களாக!

'சிந்தனைத் திரள்'

1. யோக ஆராய்ச்சிக் கூடம் :

மக்கள் ஆற்றலும் இன்பமும் பெறப்பு றப் பண்டங்களை நாடிச் செல் வதை இயல்பாகக் காண்கிறோம். ஆனால், இந் நாட்டில் பண்டைக் காலத்தில் ஒரு சிலர், உடலுக்கும் உலகத்துக்கும் காரணமான மூலப் பொருள்களை அவற்றின் நுண் தன்மையிலேயே கையாண்டு, பேராற் றலையும் நீண்டகால இன்பத்தையும் பெற்று வந்தனர். பருப்பொருள்களை விட நுண்பொருள்கள் ஆற்றல் மிக்கவை ஆதலால் இவர்கள் போக் கும் சிறந்ததாகவே இருக்கவேண்டும். இம்முறையினை ஒரு சமயத்தின் உறுப்பாகிய 'யோக' முறை என்று மட்டும் கொள்வதைவிட, மக்கள் அனைவரும் தம் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ளக்கூடிய வழிகளுள் ஒன்றென்றும் பேராற்றலைப் பெறும் கலை என்றும் கொள்வது வளர்ச்சிக்கு இடந்தருவதாகும்,

இந்த யோக முறை இந்நாட்டில் மட்டுமே இருந்ததாகக் காணப்படுவ தாலும், இன்று பெரும்பாலும் மறக் கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வருவதாலும் ஒரு காலத்தில் இது மறையவும் கூடும். அப்படி மறையு மானால் மன்பதை உய்வதற்கு ஆராய்ந்து கண்டுபிடித்த ஆன்றோர் களின் அகநெறிகளைப் பயன்படுத்திக் கொள்ளாத இழப்பு நேரிடும். எனவே இறந்துபட்ட தமிழிசையை உயிர்ப் பிக்க முயல்வதுபோல, இதனையும் மக்கள் பயன் படுத்திக்கொள்ளுமாறு செய்தல் இன்றியமையாதது. இதற்கு 'யோக ஆராய்ச்சிக் கூடம்' ஒன்றை நிறுவி, அறிவியலுக்குப் பொருத்த மான முறையில் ஆராய்ந்து, பழக்கத் தில் கண்டவற்றைப் பல மொழிக ளாலும் வெளியிட்டு, பலருக்கும் பயிற்சி யளித்தல் வேண்டும்.

இவ்வாராய்ச்சிக் கூடம், யோகி களுள் சிறந்தவரும், யோக நூலை இயற்றியவருமான திருமூலர் வாழ்ந்த இடமாகிய திருவாவடுதுறையில்நிறுவு வது நன்று. இப்பணியை அவ்வா தீனத்தாரே மேற்கொள்வது மிகவும் பொருத்தமுடையது.

2. பொருளியல் உணர்ச்சி:—

பிறநாட்டவரெல்லாம் புதுவரிகள் விதித்து, மக்களிடமிருந்து மிகுதி யாக வரிவாங்கும் இக்காலத்தில், உருஷிய நாட்டவர் பண்டங்களின் விலையை 100-க்கு 10 முதல் 20 விழுக்காடு வரை குறைத்து உதவும் செய்தியும், பட்டணங்களில் உள்ள வசதிகளை எல்லாம் கிராமங்களிலும் செய்துவைத்து, அவற்றைச் சிறு சிறு நகரங்களாக விளங்கச் செய்யும் செய்தியும் நமக்குப் பெரும் ஆறுத லைத் தருகின்றன.

இப்படிப்பட்ட உயர்ந்த நிலையை வறுமை மிக்க ஆகிய நாடுகளும் ஒல்லையிற் பெறுமாக ! இந்நிலையைக் காந்தியடிகள் முறையிலேயே இந் நாட்டவர் பெறவேண்டும். அதாவது யார்க்கும் மனக்கசப் புண்டாக்காமல் பொருளியற் சமநிலையைப் பெற வேண்டும்,

பெறும் பயன் பெரிதே யாயினும் ஒருவரையும் துன்புறுத்தக்கூடா தென்பது காந்தியடிகள் குறிக்கோள். பொருளியற் றுறையில் இம் முறை பயன்படுமா என்றையுறுவார்க்கு, அரசிய லுரிமையைப் பெற்ற வரலாறு விளக்கந்தரும்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

மழையைப்போல் நம் நெஞ்சமும் ஆர்ப்பரிக்கும். பல கொள்கைகளை அது முகந்துகொள்ளும்; எழும். அவ் வெழுச்சி சினமாக மாறும்பொழுது சூழ்நிலை இருண்டுவிடும். இடை யிடையே நம் மனத்தினின்று கருத்து மின்னல்கள் தோன்றும்; இடியைப் போன்ற கடுஞ்சொற்களும் வெளி வரும். இவ்வாறு ஆர்ப்பரித்த பின் நெஞ்சம் ஓய்ந்து அமைவதும் உண்டு. இவை நம் அனுபவம். ஆகவே, நெஞ் சத்திற்கு ஆசிரியர் மழையை உவமை யாக்கினர்.

நெஞ்சம் தலைவியை விட்டகன்ற பின் அவளிடம் எஞ்சி இருந்தவை உயிரும் உடலும். உயிருடன் கலந்து இன்புறும் ஆன்ம ஞானிகள் தம் மனத்தை அடக்க முடியவில்லையே என்று கதறி யிருப்பதை நாம் பிற் கால நூல்களில் படிக்கிறோம். நற் றிணையில் பேசப்பட்ட தலைவி ஆன்ம ஞானியல்லள். அவள் உயிருடன் இருந்தும் தன் நெஞ்சை இழந்த கார ணத்தால் தமியளானாள். தன் தனி மையை ஒருவமையால் அவள் நமக்கு விளக்கிக் காட்டுகிறாள்.

அரசன் ஒருவன் பெரிய நகர மொன்றை ஆண்டு வந்தான். அந்நக ரத்தைப் பகைவேந்தனுடைய படை கள் அலைக்கத் தொடங்கின. அந் நகரத்தில் வாழுங் குடிகள் மனங் கலங்கி அவ்வூரை விட்டகன்றனர். வாழ்வோர் அகன்ற காரணத்தால், அப்பேரூர் பெரியதொரு பாழ் ஆயிற்று. அக் குடியிலாப் பாழைக் காத்த அவ்வூர் அரசன் தனி மகனா னான். தன்னிலை அத்தனி மகனை ஒத் திருந்தது என்கிறாள் தலைவி.

குடிகள் அரசனுக்கு அங்கமாவார். நெஞ்சம் தலைவிக்கு அங்கமாயிற்று. பகையலைக் கலங்கிக் குடிகள் ஊரை விட்டேகினர்; பிரிவுத் துன்பத்தாற் கலங்கிய நெஞ்சமும் தலைவியை விட் டகன்றது. குடிகள் அகன்ற ஊர் ஒரு பாழ்; நெஞ்சம் அகன்ற தலைவியின் உடம்பும் அதன் தோற்றப் பொலி விழந்து பாழாயிற்று. பாழைக் காத்த வன், அரசன் என்ற பெயரை இழந்து தனி மகனானான்; நெஞ்சம்போன பாழுடம்பைக் காத்தவள் தலைவி என்ற பெயரை இழந்து தனிமக ளானாள். வாழ்வோர் போன பாழூரை அரசன் காப்பதில் பொருளில்லை; அதைப்போல் நெஞ்சம் போய்ப் பொலிவிழந்த தன் பாழுடம்பைத் தலைவி காப்பதிலும் பொருளில்லை. தன்னுடம்பு பின் எவ்வாறு இயங் கிற்று என்று தலைமகள் சிந்தித்தாள். "வேளை தவறாமல் உணவு கொள் கிறேன். ஆகவே என்னுடம்பு காக் கப்பட்டிருந்தது" என்ற முடிவுக்கு வந்தவள் "உண்டலளித் தென் னுடம்பே" என்றாள்.

இவ்வற்புதமான உவமைகளால் தலைவியின் கூற்றைச் சித்திரித்த கவிஞன் தனிமகனா அல்லனா என் பதை அறிஞர் சிந்தித்து முடிவு காண்பார்களாக !

இந்த வேடனைப்போல் பூவரசுவின் நிலையும் ஆகிவிட்டதா?......

அலமேலு மாரியின் வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்கிறாள் என்பது பூவரசுவுக்கும் மெதுவாகத் தெரிந்தது. பூவரசும் மாரியும் முன்னால் குறிப்பிட்டபடி சிறந்த நண்பர்கள். அப்படியிருக்க பூவரசா தம் நண்பனைச் சந்தேகப்படுவான்! இருந்தாலும் அவனை இதைப்பற்றிக் கேட்டு விடுவதென்றே தீர்மானித்தான் ஒரு நாள். அவ்விருவரும் ஊரின் பக்கத்திலிருக்கும் குளக்கரையில் சந்தித்தனர்.

மாரி! நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாமல் பதில் கூறுகிறாயா?

எது! ஆரம்பம் பலமாக இருக்கிறதே, பதில் கூறுவதற்குக்கூடவா கோபம்?

தினம் தினம் உன்னுடைய வீட்டிற்கு அலமேலு வருகிறாளா?

ஆம்! அதற்கென்ன? சரி, நாழியாகி விட்டது; அவள் வந்து விடுவாள். நான் போய் வருகிறேன்.

சென்றுவிட்டான் மாரி. விதைத்த விதை மரமாகி விட்டது. சந்தேகம் நிலையாகி விட்டது. எண்ணம் ஏமாற்றம் அடைந்தது. சிந்தனையில் ஆழ்ந்தான் பூவரசு. எத்தனை நாழிதான் இவ்வாறிருந்தானோ. அவனுக்குத் தெரியாது. தன் நிலையை அவன் அடையும்போது, பொழுது சாயும் தருணம். பட்சிகளின் சிறகுகளின் சலசலவென்ற ஒலி அம்மரங்களினூடே கேட்டுக்கொண்டிருந்தது. எழுந்து தனது வீடு நோக்கிச் சென்றான்.

தன் வீட்டுக்கு நேரே செல்ல வேண்டுமென்றுதான் நினைத்தான். ஆனால் அவனுடைய கால்கள் தாண்டவராயர் வீட்டுக்குத்தன்னையறியாமலேயே சென்றது.

என்ன பூவரசு, என்ன உடம்புக்கு? உன் நண்பன் மாரியிடமாவது கையைக் காட்டி மருந்து வாங்கிச் சாப்பிடுவதுதானே!

- சந்தேகம் -

(அ. தி. வீரராகவன்)

ஒன்றுமில்லை மாமா! சும்மா இப்படிப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். இன்னும் ஐந்து நாள் கழித்துத் தைப்பூச ழா வருகிறது.

'ஆமாம்' 'ஆமாம்', இசத் தைப்பூசத்திற்கு அலமேலுகூடப் பால் காவடி எடுக்கப் போவதாச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். ! நான் பெரியண்ணன் முதலி ட்டிற்குக் கொஞ்சம் விரைவாகச் ன்றுவர வேண்டும். உள்ளே சென்று தாவது சாப்பிட்டுப் போ தம்பி. னக்கும் அலமேலுவுக்கும் விரைவி மண முடித்து விட்டால் என; ஒரு கவலை 'ஒழியும்' என்று கூறி ளியே சென்றுவிட்டார் தாண்டவராயர்.

அன்னபூரணி அடுத்த ருவுக்குச் சென்றிருந்தாள். அலமே மட்டும் தனியாக இருக்கிறாள் ன்று தெரிந்தது. அதை அறி தும், அவளைக் கேள்விமேல் கேள்வி கட்டுத் திணர அடிக்க வேண்டும் ன்ற ஆத்திரத்தோடு பூவரசு ளே சென்றான்.

'வாங்கோ! அத்தான், உட்காருங்கள். இதோ சுடச்சுடக் கேரகு அடை எடுத்து வருகிறேன்.' று கள்ளமில்லாச் சிரிப்பு முகத்துடன் அலமேலு கூறியதைப் பார்த்து வரசுவுக்கு அவளைக் கேட்கவேண்டுமென்று நினைத்திருந்த கேள்விகளெல்லாம் மறந்து விட்டன, தி யைக் கண்டு பனி மறைவது போல.

'அதிருக்கட்டும் அலமேலு! ளப்பாரு உன்னை யாருக்கு ம செய்து வைக்கப் போகிறேன் எ இப்போது சொன்னார்.

அவனால் சுத்தி வளைத்துக்கொ பேச முடியவில்லை. மேலும் னுக்கிருந்த ஆத்திரம் அவனை நேரிடையான கேள்வியைக் கே வைத்தது.

'என் அத்தான்! என்னைச் சோதிக்கிறீர்களா? உங்களைத்தான்'.

அவன் எதிர்பார்த்திருந்த பதில் வேறு. அவன் அடைந்த மறுமொழி வேறு? முதலில் திடுக்கிட்டான். பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டு 'உனக்குச் சம்மதமா?' என்ற கேள்வியைக் கேட்டு வைத்தான். இப்போதும் அவனுக்கு ஏமாற்றந்தான்.

'எங்கப்பா சம்மதந்தான். என் சம்மதமும்' இப் பதிலைக்கேட்டு அவனடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. பிறகு சென்றுவிட்டான் தன் வீட்டிற்கு. ஆனால் அடுத்த நாள் காலை நடந்த நிகழ்ச்சி அவனை அப்படியே மாற்றிவிட்டது......

பூவரசு கோயிலுக்குச் செல்வதற்கு மாரியின் வீட்டைத் தாண்டித்தான் செல்லவேண்டும். அன்று காலை அவன் அவ்வாறு செல்லும்போதுதானா மாரியும் அலமேலும் அவ்வாறு பேசிக்கொள்ள வேண்டும்!

(தொடரும்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

“முல்லைக் கொடி”

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,

உரிய விலையில்,

பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சுவைப் பண்பில், பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு !

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4

வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;

ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.

இசைந்த முன்பணத்துடன்

தேவைக்கு எழுதுக !

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. 1½. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம் ஒரு தடவைக்கு		ரூ. 30
அரைப் பக்கம்	,,	,, ரூ. 16
ஒரு பத்தி	,,	,, ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாடு மக்கள், ‘மொழி’ ‘கலை’ ‘...ாழில்’ ‘அருள்’ ‘பணி’ என்னும் ஐவகை... ாழ்வியல் திறமைகளிற் சிறந்து தி... வதற்கு முயல்வது.

89

பள்ளி கல்லூரி, கலையரங்கு, அச்சகம், ...ற்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொலகம், அருள் நிலையம், உணவு விடுமுதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை !

குரு(...)த்தில் **உணவு விடுதி**

- ...பிரகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்... பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- ...பொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்... கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- ...ராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று ...வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்... இடம் அளிக்கப்பெறும்.
- ...வுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து ...ள்ள வாய்ப்புண்டு.
- ...மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் ...ருகுல இல்லத்தின் வாயில் என்றும் திறந்திருக்கின்றது!

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)